# 324 - D அரிமா மாவட்ட வரலாறு

## Lions District History

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15,16 தேதிகளில் கோயம்புத்தூர் S.N.R. கலையரங்கத்தில் ஆளுநர் Er. R. முருகேசன் தலைமையில் நடைபெற்ற 324 B1 மாவட்ட மாநாட்டில், 324 B5 என்ற புதிய மாவட்டத்தை உருவாக்க ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 324 B5 புதிய மாவட்ட ஆளுநராக அரிமா C.G.V. கணேசன் அவர்களும், துணை ஆளுநராக அரிமா Er. A. அண்ணாமலை அவர்களும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆளுநர் அரிமா C.G.V. கணேசன் அவர்களின், மாவட்டச் செயலாளர் அரிமா V. சசிதரன், மாவட்டப் பொருளாளர் அரிமா M.V. பிரகாஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மாவட்டம் 324 B5 இன் வாசகம், **Build Bonds** - உறவை மேம்படுத்துவோம் என்பதாகும்.

2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் தேதி ஸ்ரீ ராம கிருஷ்ணா கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில், மாவட்ட ஆளுநராக, அரிமா Er.A. அண்ணாமலை அவர்களும் அரிமா துணை ஆளுநராக SA. ரவிச்சந்திரன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 2007 - 2008 ஆம் ஆண்டுக்கு, Er.A. அண்ணாமலை அவர்களால் மாவட்ட செயலாளர் அரிமா N. ராஜன் அவர்களும், மாவட்டப் பொருளாளராக அரிமா P.L. சிவசாமி அவர்களும் நியமிக்கப்பட்டனர். 2007-2008 ஆம் அரிமா ஆண்டின் வாசகம் **Inspire - Involve - Innovate** - எழுச்சி - ஈடுபாடு - ஏற்றம்.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ம் தேதி ராமகிருஷ்ணா கலையரங்கில் நடைபெற்ற மாநாட்டில் கோவை நியூ சென்ட்ரல் அரிமா சங்கத்தைச் சார்ந்த A.S. ரவிச்சந்திரன் அவர்கள் 2008-2009 ஆண்டுக்கு ஆளுநராகவும், அவினாசி கோல்டன் ஜீப்லி அரிமா சங்கத்தைச் சார்ந்த Dr. M. வேலுசாமி அவர்கள் உதவி ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் **Dream - Plan - Achieve** - கனவுகாண் - திட்டமிடு - வெற்றிபெறு. D . சைமன் அவர்கள் மாவட்ட செயலாளராகவும், K. ராமசாமி அவர்கள் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28, 29 தேதிகளில் கோவை ராமகிருஷ்ணா கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் அவினாசி கோல்டன் ஜீப்லி அரிமா சங்கத்தைச் சார்ந்த Dr.M. வேலுசாமி அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், மேட்டுப்பாளையம் அரிமா சங்கத்தைச் சார்ந்த M. வின்சென்ட் வேதராஜ் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும் கோவை பிரஸ்டீஜ் அரிமா சங்கத்தைச் சார்ந்த Er.P. பரமேஸ்வரன் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் இதயங்களோடு இணைவோம் - **Knitting Hearts Together.** T.S. விஜயகுமார் மாவட்டச் செயலாளராகவும், Dr. C.S.R. குமார் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி திருப்பூர் TEKIC I K F வணிக வளாகத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் மேட்டுப்பாளையம் அரிமா சங்கத்தைச் சார்ந்த M. வின்சென்ட் வேதராஜ் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை பிரஸ்டீஜ் அரிமா சங்கத்தைச் சார்ந்த Er.P. பரமேஸ்வரன் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை சித்தாபுதூர் அரிமா சங்கத்தைச் சார்ந்த Na. மனோகரன் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் வெற்றியை நோக்கி பயணிப்போம் - **March Towards Victory** M.K. கிருஷ்ணமூர்த்தி மாவட்டச் செயலாளராகவும், B.K. ஆறுமுகம் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் தேதி கோவை மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ லஷ்மிநாராயன் மஹாலில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை பிரஸ்டீஜ் அரிமா சங்கத்தைச் சார்ந்த Er.P. பரமேஸ்வரன் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை சித்தாபுதூர் அரிமா சங்கத்தைச் சார்ந்த Na. மனோகரன் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை டெக்ஸ்சிட்டி அரிமா சங்கத்தைச் சார்ந்த P. சசிக்குமார் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் முதல்வனாக இரு முதல்வனோடு இரு - **Be The First Be With The First** P.P. உன்னிகிருஷ்ணன் அவர்கள் மாவட்டச் செயலாளராகவும், P. ஜான் பீட்டர் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி கோவை அவினாசி சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் லீ மெரிடியனில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை சித்தாபுதூர் அரிமா சங்கத்தைச் சார்ந்த Na. மனோகரன் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை டெக்ஸ்சிட்டி அரிமா சங்கத்தைச் சார்ந்த P. சசிக்குமார் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை குளோபல் அரிமா சங்கத்தைச் சார்ந்த A. வேணுகோபால் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் உன்னதத்தை உணர்வோம் - **Experience The Excellence** . Dr.P. சின்னச்சாமி அவர்கள் மாவட்டச் செயலாளராகவும், M. வெங்கடேசலு அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் தேதி கோவை அவினாசி சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் ரெசிடென்சியில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை டெக்ஸ்சிட்டி அரிமா சங்கத்தைச் சார்ந்த P. சசிக்குமார் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை குளோபல் அரிமா சங்கத்தைச் சார்ந்த A. வேணுகோபால் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை அண்ணாநகர் சங்கத்தைச் சார்ந்த R. தங்கப்பழம் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் எழுச்சிமிகு தியாகம் ஏற்றமிகு சேவை - **Service And Sacrifice Inspire.** A. தனசேகரன் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், M. குமார் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி கோவை மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ லஷ்மிநாராயன் மஹாலில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை குளோபல் அரிமா சங்கத்தைச் சார்ந்த A. வேணுகோபால் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை அண்ணாநகர் சங்கத்தைச் சார்ந்த R. தங்கப்பழம் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், அன்னூர் டவுன் சங்கத்தைச் சார்ந்த T.S. விஜயகுமார் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணைஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் நாம் சாதிப்போம் - **We Achieve.** K. குப்புசாமி அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், G. அருளானந்தம் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் தேதி கோவை மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ லஷ்மிநாராயன் மஹாலில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை அண்ணாநகர் சங்கத்தைச் சார்ந்த R. தங்கப்பழம் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், அன்னூர் டவுன் சங்கத்தைச் சார்ந்த T.S. விஜயகுமார் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை விக்டரி சங்கத்தைச் சார்ந்த N. பாலகிருஷ்ணன் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் அறப்பணிக்கு அர்ப்பணி - **Dedicate to Noble Cause.** R. தினகரன் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், R. மோகன்குமார் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் தேதி கோவை பீளமேட்டில் அமைந்துள்ள என்.எஸ்.ஆர். மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் அன்னூர் டவுன் சங்கத்தைச் சார்ந்த T.S. விஜயகுமார் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை விக்டரி சங்கத்தைச் சார்ந்த N. பாலகிருஷ்ணன் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை சாய்பாபா காலனி சங்கத்தைச் சார்ந்த B.K. ஆறுமுகம் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் கனவுகள் மெய்ப்பட வேண்டும் - **Dreams to Reality.** K. செந்தமிழ் செல்வன் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், D. சௌந்தரராஜன் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் தேதி கோவை அவினாசி சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் ரெசிடென்சியில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை விக்டரி சங்கத்தைச் சார்ந்த N. பாலகிருஷ்ணன் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை சாய்பாபா காலனி சங்கத்தைச் சார்ந்த B.K. ஆறுமுகம் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், சேரன் சிறுவானி சங்கத்தைச் சார்ந்த S. வெங்கிடசுப்ரமணியன் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் உன்னில் உன்னை தேடு - **Excavate to Innovate.** T. சீனிவாசன் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், S. கணேஷ் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் தேதி கோவை குப்பேபாளையத்தில் அமைந்துள்ள Lions Leadership Institute -ல் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை சாய்பாபா காலனி சங்கத்தைச் சார்ந்த B.K. ஆறுமுகம் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், சேரன் சிறுவானி சங்கத்தைச் சார்ந்த S. வெங்கிடசுப்ரமணியன் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், பொள்ளாச்சி பிரின்ஸ் சங்கத்தைச் சார்ந்த S. தர்மராஜ் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் அன்பு அறம் ஆற்றல் - **Benevolence Kindles Aspiration.** C. குணசேகரன் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், M. ரமணன் அவர்கள் மாவட்ட பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி மதுக்கரை மார்க்கட்டில் அமைந்துள்ள லின்டஸ் கார்டனில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கோவை சேரன் சிறுவானி சங்கத்தைச் சார்ந்த S. வெங்கிடசுப்ரமணியன் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், பொள்ளாச்சி பிரின்ஸ் சங்கத்தைச் சார்ந்த S.தர்மராஜ் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை மெட்ரோபொலிடன் சங்கத்தைச் சார்ந்த K. குப்புசாமி அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் மனமார்ந்த சேவை - **Serve With Humanity**. R.J. ரஜேஷ் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2020 - 2021 ஆம் ஆண்டு நமது மாவட்டத்தின் VIX- வது மாவட்ட மாநாடு மார்ச் 20ம் நாள் எஸ்.எம்.ஆர். திருடண மண்டபம், சுப்பிரமணியம் பாளையம், கோவை 29ல் நடைபெற இருந்தது. Covid - 19 வைரஸ் தொற்று காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து இந்நிலை நீடித்துக் கொண்டிருக்கும் காரணத்தினால் நமது VIX - வது மாநாடு மே 27ம் நாள் (2020) Virtual Meeting மூலமாக (Online) நடைபெற்றது.

அதில் பொள்ளாச்சி பிரின்ஸ் சங்கத்தைச் சார்ந்த S. தர்மராஜ் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை மெட்ரோபொலிடன் சங்கத்தைச் சார்ந்த K. குப்புசாமி அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை அரிஸ்டோ சங்கத்தைச் சார்ந்த P. ஜான்பீட்டர் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் உச்சம் தொடு - **Attain the Heights.** கோவை பிரஸ்டன்ஸி சங்கத்தைச் சார்ந்த சங்கர் செல்வராஜ் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், கோவை ஹில் சிட்டி சங்கத்தைச் சார்ந்த Dr.V. ஸ்ரீனிவாசகிரி அவர்கள் அமைச்சரவை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2021-2022 ஆம் ஆண்டு நமது மாவட்டத்தின் XV- வது மாவட்ட மாநாடு பிப்ரவரி மாதம் 28ம் நாள் கோவை குப்பேபாளையத்தில் அமைந்துள்ள Lions LeadershiP Institute -ல் நடைபெற்றது.
அதில் கோவை மெட்ரோபொலிடன் சங்கத்தைச் சார்ந்த K. குப்புசாமி அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், கோவை அரிஸ்டோ சங்கத்தைச் சார்ந்த P. ஜான்பீட்டர் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், அன்னூர் டவுன் சங்கத்தைச் சார்ந்த R. மோகன் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட வாசகம் அன்புடன் வாழ்வோம் - **Live to Love**. கோவை அச்சீவர்ஸ் சங்கத்தைச் சார்ந்த R. முரளிதரன் (பாபு) அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், கோவை மெட்ரோபொலிடன் சங்கத்தைச் சார்ந்த K. லீலாகிருஷ்ணன் அவர்கள் அமைச்சரவை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2022-2023 ஆம் ஆண்டு நமது மாவட்டத்தின் XVI- வது மாவட்ட மாநாடு பிப்ரவரி மாதம் 25ம் நாள் கோவை அவினாசி சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் Radisson Blu -ல் நடைபெற்றது.
அதில் கோவை அரிஸ்டோ சங்கத்தைச் சார்ந்த P. ஜான்பீட்டர் அவர்கள் மாவட்ட ஆளுநராகவும், அன்னூர் டவுன் சங்கத்தைச் சார்ந்த R. மோகன் அவர்கள் முதல் மாவட்ட துணை ஆளுநராகவும், கோவை ஏர்போர்ட் சங்கத்தைச் சார்ந்த N. சண்முகசுந்தரம் அவர்கள் இரண்டாம் மாவட்ட துணை ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
மாவட்ட வாசகம் அன்பால் சேவை - **serve by Love** கோவை காந்திபுரம் ஈஸ்ட் சங்கத்தைச் சார்ந்த M. ரமணன் அவர்கள் மாவட்ட அமைச்சரவை செயலாளராகவும், கோவை ப்ளசிங் சங்கத்தைச் சார்ந்த M. ஜோசப் தைனீஸ் ராஜா அவர்கள் அமைச்சரவை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.